# Rebhügel பாடசாலைக்கு வரவேற்கிறோம்

அன்புள்ள மாணவிகளே , அன்புள்ள மாணவர்களே,

நீங்கள் மேற்பிரிவுக்கு வந்துவிட்டீர்கள், இது பாடசாலையின் இறுதிப்பகுதி. இங்கு நீங்கள் எங்களுடன் சேர்ந்து உங்களுடைய எதிர்காலத்தை தயார்படுத்துகிறீர்கள்.

எங்களுடைய பாடசாலையானது சமமாக சேர்ந்து வாழும் இடமாகவும், கற்கும் இல்லமுமாக இருக்கிறது.
நாங்கள் உங்களுக்கு வழங்குவது:

- ☞ அன்பான, ஆர்வமான ஆசிரியர்களும் பராமரிப்பாளர்களும்,
- ☞ நல்ல சகமாணவிகள், மற்றும் சகமாணவர்கள்,
- ☞ ஒரு நல்ல கல்வி. பாடசாலை முடியும் காலத்தில் உங்களுக்கு சரியான – கதவுகள் திறந்து இருப்பதற்காக உங்களுக்கு உதவி செய்ய விரும்புகிறோம்.
- ☞ வீட்டுவேலைகள் முடிப்பதற்கு, வகுப்புகள் மற்றும் சிறப்பான மாணவர்களை ஊக்கிவிப்பதை தவிர மதிய பராமரிப்பு நிலையம் மற்றும் பல பராமரிப்புகளை வழங்குகின்றோம்.

நாங்கள் உங்களிடம் இருந்து எதிர்பார்ப்பது:

- ☞ வகுப்பில் நீங்கள் கலந்துகொள்ள வேண்டும், கல்வி கற்க ஆர்வம் காட்ட வேண்டும்.
- ☞ ஆசிரியர்களையும் பராமிர்ப்பாளர்களையும் நம்பி, அவர்கள் உங்களுக்கு அளிக்கும் வேலைகளை, கூற்றுகளை மற்றும் ஆலோசனைகளை தீவிரமாக கவனிக்க வேண்டும்
- ☞ எங்களுடைய விதிமுறைகளை (எம்மைப்போல) கடைப்பிடிக்க வேண்டும்.

எல்லோரும் நன்றாக செயல் பட எங்களுக்கு மூன்று விடையங்கள் மிகவும் முக்கியம்:

- ✓ பழக வேண்டும், கற்க வேண்டும், பயிற்ச்சி செய்ய வேண்டும் = முன்னேற வேண்டும்
- ✓ ஒற்றுமைதான் வெற்றியை தரும்!
- ✓ முக்கியமான விடையங்கள் சரியான இடங்களுக்கு அறிவிக்க, அவைகள் எழுதப்பட வேண்டும். இந்த கோப்பியும் இதற்காக பயன்படுத்தப்படும்.

இந்த பாடசாலையிலும் முரண்பாடுகள் உள்ளன. உங்களுக்கு ஒரு பிரச்சனை வந்தால், உங்களுக்கு உதவி புரிய இதற்காகவே பயிற்சி பெற்ற 2 ஆம், 3ஆம் மேல் வகுப்பு மாணவர்கள் தயாராக உள்ளார்கள்.

வன்முறை /தாக்கல்: உங்களுடை ஆசிரியரை அல்லது பராமரிப்பாளரை அறிவியுங்கள். அவர்கள் பாதிக்கப்பட்ட பெற்றோருடன் சேர்ந்து மற்றும் பாடசாலை நிர்வாகத்தினருடனும் பாடசாலை சமூக செவையாளருடனும் வழிகள் கண்டுபிடிக்க உங்களுக்கு உதவுவர்.

எங்களுடைய பாடசாலையில் உங்களுக்கு நல்ல சந்தோசமும் வெற்றியையும் விரும்பும்

உங்கள் பாடசாலை அதிபர்,

caspar.schaudt , கஸ்பர் ஷவ்ட்

**எங்கள் பாடசாலையின் முக்கியமான தொடர்புகள்**


குழு அறை: 044 454 22 30
பாடசாலை நிர்வாகம்: 044 454 88 35/caspar.schaudt@schulen.zuerich.ch
பாடசாலை சமூகசேவையாளர்: 044 454 22 37 / gabriele.mengel@zuerich.ch
மதிய பராமரிப்பு இடம்: 044 454 22 40 / gabriela.frezza@schulen.zuerich.ch

# சமூகமளிக்காமை மற்றும் பெற்றோர் தொடர்புக்கான கொப்பி

இந்த கொப்பி உங்கள் பெற்றோருக்கும், உங்களுக்கும் உங்களுடைய பாடசாலைக்கும் ஒரு இணைப்பாக உள்ளது.

இந்த கொப்பியில் சமூகமளிக்காமைக்கான மன்னிப்பு கோரலுக்காக இடம் உண்டு. பொதுவான கடமைகளை பற்றியும் உங்களின் பழக்கவழக்கம் பற்றியும் உங்களுக்கும் உங்களுடைய பெற்றோருக்கும் ஒரு கணிப்பு கொடுக்கப்படும். மேலும் உங்களுக்கும் உங்கள் பெற்றோருக்குமான பாடசாலை (ஆசிரியர், பராமரிப்பாளர்கள், பாடசாலை நிர்வாகம்) அறிவித்தல்களுக்கும், உங்களுக்கும் உங்கள் பெற்றோரும் பாடசாலைக்கான அறிவித்தலுக்கும் இடம் உண்டு.

இந்த கொப்பியை எப்போதும் வகுப்பிலும் பராமரிப்பு வேளையிலும் வைத்திருப்பதன் மூலம் தான் இந்த கோப்பியின் நோக்கத்தை அடையமுடியும்.

இந்த கோப்பி Rebhügel பாடசாலைக்கு உரிமையானது. நீங்கள் அதனை மிகவும் கவனமாக வைத்திருப்பதுதான் உனக்கும் அது உதவியாக இருக்கும். தொலைத்து விடக்கூடாது ( ஒரு புதிய கொப்பி 20 Franken பெறுமதியானது.)

இந்த கொப்பியின் உரிமையாளர் (முதற்பெயர், குடும்பப்பெயர்:__________________________
வகுப்பு:___________ மேற்பிரிவு, Sek_______
வகுப்பாசிரியர்(கள்):____________________________________________________________________

கைதொலைபேசி(மாணவர்):_______________________________
மின்னஞ்சல் முகவரி E-mail (மாணவர்):___________________________________________________
_____________________________________________________________________________________
பெற்றோரின் அல்லது பாதுகாவலர் குடும்பப்பெயர், முதற்பெயர்:

_____________________________________________________________________________________

முகவரி PLZ இடம்:

__________________________________________ __________ _________________________

தொலைபேசி இலக்கம் (வீடு):___________________________________________________________
தொலைபேசி இலக்கம் (வேலை)::__________________________________________________________
கைதொலைபேசி (பெற்றோர்)::____________________________________________________________
மின்னஞ்சல் முகவரி(கள்) (பெற்றோர்): ______________________________________________________
_____________________________________________________________________________________
எதிர்பாராத விதமாக வகுப்பு நடைபெறாத போது:

- o எனது மகள் / எனது மகன் பாடசாலையில் பராமரிக்கப்படவேண்டும்.
- o எனது மகள் / எனது மகன் வீட்டில் நிற்கலாம்/ வீட்டிற்கு வரலாம். நான் / நாம் அதற்கு பொறுப்பு எடுக்கின்றோம்.

_____________________________________________________________________________________
நாங்கள் இந்த தகவலின் கருத்துக்களை கவனத்தில் எடுத்துக் கொண்டோம்.(பக். 1 – 8 ):

பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் கையொப்பம்: ___________________________________

மாணவரின் கையொப்பம்: ____________________________________________________________

## Rebhügel பாடசாலையின் விதிமுறைகள்

**பாடசாலையில் நாங்கள் நன்றாக படிக்கவும் நல்ல மனநிலையில் உணரவும் எங்களுடைய பாடசாலை ஒரு அன்பான மற்றும் அச்சமில்லாத இடமாக இருக்க வேண்டும்.**

சமூக பழக்கவழக்கமும் சுயபொறுப்பும்:
இப்படி நாங்கள் மற்றவர்களுடன் நடக்க வேண்டும்:

சாதகமான வாழ்க்கை

எல்லோரிடமும் புரிந்துணர்வு, நாகரீகமான நடத்தை மற்றும் மரியாதை எதிர்பார்க்கின்றோம்.

- **வன்முறையின்மை**
- **இனத்துவேசமின்மை**
- **தனிமைப்படுத்தாமை**

**நாங்கள் பிற பொருட்களுடனும், பாடசாளையுடனும், எங்களுடைய சுற்றாடளுடனும் கவனமாக இருப்போம்.**

- **திருடாமை**
- **குப்பைகள் வீசாமை**
- **சேதங்கள் ஏற்படுத்தாமை**
- **நாசவேலை செய்யாமை**

**நாங்கள் நம்பிக்கையும் சகிப்புத்தன்மை உள்ள சூழலுக்கு கோரிக்கை விடுகிறோம்.**

- **வன்முறையின்மை**
- **தனிப்படுத்தாமை**
- **வேற்றுமைப்படுத்தாமை**
- **அதிகாரத்தை தவறா க பயன்படுத்தாமை**

### பாடசாலை விதிமுறைகள்

**வகுப்பு நடைபெறும் பொது (07.30-12.00 / 13.40-17.15)**

- **ஆசிரியர் அல்லது பராமரிப்பாளர் அறிவிப்பின்றி நாங்கள் பாடசாலை சுற்றாடலை- பிரதேசத்தை விட்டு வெளியேறக்கூடாது**
- **கைத்தொலைபேசி மற்றும் இலத்திரனியல் பொருட்கள் பாடசாலை பிரதேசத்தில் தெரியவோ கேட்கவோ கூடாது.**
- **வேண்டாத சத்தங்களை பாடசாலையிலும் பாடசாலை பிரதேசத்திலும் தவிர்ப்போம்.**

**நாங்கள் பாடசாலை பிரதேசத்திலும் பார்வைக்கு எட்டிய வரையிலும் தீய பாவனைக்கு அடிமையான பொருட்கள் (சிகரட், மதுபானங்கள்...) மற்றும் போதைப்பொருட்கள் பாவிக்ககூடாது.**

**பாடசாலையிலும் பாடசாலை பிரதேசத்திலும் நாங்கள் சுவிங்கம் சப்பக்கூடாது, சக்தி தரும் பானங்கள் (Energiedrinks) அருந்தக்கூடாது.**


**பாடசாலையில் ஒழுங்கும் சுத்தமும் எங்களுக்கு மிக முக்கியம். சுற்றாடலிலும் பிரதேசத்திலும் நாங்கள் கவனம் செலுத்துவோம்.**

**குப்பைகள் குப்பைக்கூடையில் போடவேண்டும், நிலத்தில் அல்ல.**

**விதிமுறைகளை நடைமுறைப்படுத்த பெற்றோர் அல்லது பாதுகாவலர் பாடசாலைக்கு அதிகாரம் கொடுக்கின்றனர்**

---
[1] Artikel 54 VSV

# இடைவேளையின் போது நிற்கும் இடத்தின் விதிமுறைகள்




மாணவர் மாணவிகளாகிய நாம் எமது இடைவேளையை வெளியில் களிப்போம்.

இடைவேளைக்கு முன்பும் பின்பும் நாங்கள் பாடசாலைக்கு வெளியிலும் உள்நுழையும் போதும் நெருக்கடியின்றி நடந்துகொள்வோம். நாங்கள் ஒருவருக்கும் பாதிப்பு ஏற்படுத்த மாட்டோம்.

நாங்கள் இடைவேளை கண்காணிப்பாளரின் அறிவுறுத்தலின் படி நடப்போம். (ஆசிரியர் / பராமரிப்பாளர் / மாணவிகள் / மாணவர்)

வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள வாகன செல்லும் பகுதி மற்றும் வாகனத்தரிப்பிடம் தவிர்த்த இடம் தான் இடைவேளையின் போது நிற்கும் இடம். நாங்கள் பந்து விளையாட்டுக்கு Hartplatz என்று குறிக்கப்பட்ட இடத்தை பாவிக்கலாம். (வரைப்படத்தைப் பார்க்கவும்)

முதலாவது மணி அடித்த உடன் நாம் பாடசாலைக்குள் நுழைய வேண்டும், இரண்டாவது மணி அடித்த பின்னர் நாம் வகுப்பறையில் அல்லது பாட அறையில் பாடத்திற்கு தயாராக இருக்க வேண்டும்.

வகுப்பு நேரங்களில் (07.30-12.00 13.40-17.15) நாம் பாடசாலை பிரதேசத்தில் சைக்கிள், மோட்டார் சைக்கிள் , சில்லுப்பலகை போன்ற வேறு சாதனங்களும் பயன்படுத்தக்கூடாது.

சைக்கிள், மோட்டார் சைக்கிள், சில்லுப்பலகை போன்ற வேறு சாதனங்கள் அதற்குரிய நிறுத்தும் இடத்தில விடவேண்டும்.

பனிக்காலத்தில் எங்கு நாம் பனி உருண்டை எறியலாம் என்று விதிமுறைப்படுத்தப்பட்டுள்ளது..

## எல்லோரும் சேர்ந்து பாடசாலைக்குப் போக விதிமுறைகள் தேவை

நீங்கள் விதிமுறையை மீறினால் பின்விளைவுகள் உண்டு. நீங்கள் எங்களுடைய ஒன்றான விதிமுறைகளை கடைப்பிடிப்பதற்கு, நாங்கள் உங்களுக்கு ஆதரவும் உதவியும் செய்ய விரும்புகிறோம்.

விதிமுறை மீறினால் நாங்கள் மூன்று கட்டங்களைக் கொண்ட திட்டத்தை தயார்படுத்தியுள்ளோம். ஒரு சூழ்நிலை ஏற்படும் பொது அதற்கு சரியான நடவடிக்கை எடுப்பதற்கு உதவியாக அமைவதற்கு உங்களுக்கும், உங்கள்பெற்றோருக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும், பாதுகாவலருக்கும் இது தேவைப்படுகிறது. அத்தோடு ஆசிரியரியரிடம் படிமுறைகளை பற்றி ஆவணம் உண்டு.

கட்டம் 0: நீங்கள் விதிமுறைகளை கடைப்பிடிக்கிறீர்கள் - தொடர்ந்தும் செய்யுங்கள்!

முதலாவது கட்டம்: பொறுப்பு வகுப்பாசிரியரிடம் உண்டு - அத்துடன் உங்களிடமும் உண்டு!

> விதிமுறை மீறியதற்கு ஒரு நடவடிக்கை எடுப்பதோடு, உங்களுடைய ஆசிரியை அல்லது ஆசிரியர் உங்களுடன் சேர்ந்து விதிமுறை மீறியதன் காரணத்தை கண்டுபிடிக்கவும் தீர்வுக்கான ஒரு ஒப்பந்தத்தையும் எடுக்க முயற்சி செய்வார்.
>
> தேவைப்படும்போது உங்கள் பெற்றோருக்கும் அறிவிப்போம். (வகுப்புநேரம் தவிர்த்த நேரத்தில் வேலை செய்ய வேண்டும் என்ற ஒரு நடவடிக்கை அல்லது அது போன்றவை எடுக்கப்பட்டால்)
> உங்களுடைய வகுப்பாசிரியை அல்லது வகுப்பாசிரியர் ஒரு பேச்சுவார்த்தைக்கு உங்களையும் உங்கள் பெற்றோரையும் அழைக்கலாம். இதில் தேவையென்றால் பயிற்சி பெற்ற பாட ஆசிரியருடன் சேர்ந்து தீர்வுகளை பற்றி உரையாடலாம். எழுத்துமூலமான ஒரு ஒப்பந்தம் செய்யவும் வாய்ப்பு உண்டு.
>
> விதிமுறைகள் மீறுவது பலமுறை நடந்தால், அவை உங்களின் அறிக்கைப்பத்திரத்தில் Arbeitshaltung und Sozialkompetenz என்ற பகுதியின் மதிப்பீட்டுக்கு பின்விளைவுகள் உண்டு.

இரண்டாவது கட்டம்: பாடசாலை நிர்வாகம் பொறுப்பேற்கும்

> உங்களுடைய பழக்கவழக்கத்தில் முனேற்றம் காணாவிட்டாலும் பலதடவை விதிமுறைகளை மீறினாலும் பாடசாலை நிர்வாகம் விழிப்படையும். அவர்கள் உங்களையும் உங்கள் பெற்றோரையும் ஒரு பேச்சுவார்த்தைக்கு அழைக்கலாம். அவர்கள் மேலதிகமான நடவடிக்கை எடுத்து வற்புறத்தலாம். இது மிகவும் உத்தியோகப்பூர்வமாகப்படுகிறது.

மூன்றாவது கட்டம்: கல்வி அலுவலகம் பொறுப்பேற்கிறது

இனி கல்வி திணைக்களம் மேலதிகமான நடவடிக்கைகளை தீர்மானிக்கும்.

எல்லாக் கட்டங்களிலும் ஆலோசனை மற்றும் ஆதரவு வழங்குதல் உண்டு, சிறப்பாக பாடசாலை சமூகசேவையாளர். சூழ்நிலையைப் பொறுத்து உங்களுக்கும் பெற்றோருக்கும் பாடசாலையால் ஆதரவு வழங்கப்படும். நீங்கள் அடுத்த (அல்லது இன்னும் மேலதிகமான) கட்டத்திற்கு போவதற்குமுன் சரியான சமயத்தில் ஆதரவை எடுத்துக் கொள்வது நல்லது.

**பாடசாலையின் இணையம் (Internet) மற்றும் மின்னஞ்சல் (E-Mail)**

**எம்மிடமும் இது செல்லுபடியாகும்:**
***„ஒழுங்காக இரு! கணணியிலும் கைத்தொலைபேசியிலும் வன்முறை வேண்டாம்!"***

- **சட்டத்திற்கு எதிரான, ஆபாசமான, இனத்துவேசமான, பாலியல்ரீதியான அல்லது வன்முறையை நன்கு காட்டும் இணையப்பக்கங்களை தட்டவோ பாவிக்கவோ கூடாது.**
- **அவ்வாறான மின்னஞ்சல்களையும் பரப்பக்கூடாது.**

**அனுமதிக்கப்படாதவை உதாரணமாக:**

- **மின்னஞ்சல் மூலமாக சங்கிலி தொடர்கடிதங்கள் அனுப்புதல்.**
- **இணையத்திலிருந்து மென்பொருட்கள்** (Programme), **விளையாட்டுக்கள் மற்றும் பாடல் தரவுகள்** (Audiodateien), **படத்தரவுகள்** (Videodateien) **தரவிறக்குதல் அல்லது பதிவுசெய்தல்.**

Rebhügel **பாடசாலையின் „ஆடைக்குறியீடு"**

**மரியாதைக்குரிய தொடர்புகளுக்கும், வெற்றிகரமான, பிரச்சனைகள் அற்ற, உணர்வு தூண்டுதல்கள் இல்லாத பாடசாலை நாளந்த நடைமுறை சாத்தியமாக வேண்டுமென்றால், நாங்கள் அதற்கேற்றவாறு நடத்தையிலும் உடை அணிவதிலும் கவனம் செலுத்த வேண்டும்.**[2]
**வகுப்புக்கு ஏற்றவாறு சரியாகவும் பொருத்தமாகவும் உடை அணிய வேண்டும்.**

- **விளையாட்டு பயிற்சி உடை விளையாட்டுப்பாடவேளையில் அணியலாம் - பாடவேளையில் அல்ல.**
- **மாணவிகள் இறுக்கமான நீள காற்சட்டை** (Leggins) **அல்லது அதுபோன்ற காலோடு ஒட்டிய உடைகளுக்கு மேலாக கட்டாயமாக காற்சட்டை அல்லது பாவாடை அணியவேண்டும்.**
- **தொடை தெரியும் கட்டை ஜீன்ஸ் அணியும் பொது நாங்கள் அதை நாகரீகக்குறைவாகவும் உணர்ச்சி தூண்டுதலாகவும் கருதுகிறோம். அதனால் இவ்வகையாக அணிவதை எங்களால் சகிக்க இயலாது.**

## பயிற்சி பெற்ற பாடவகுப்புக்கும் விதிமுறைகள் தேவை

**சிறப்பான விதிமுறைகள் தேவையென்றால் (பாடவகுப்பு / சிறப்பான வகுப்பறை) அதற்குரிய சிறப்பு ஆசிரியரால் உங்களுக்கு நேராக அறிவிக்கப்படும், அத்துடன் எழுத்துமூலமும் உறுதி செய்து வைத்துக்கொள்ளப்படும்.**

| |
|---|
| **மாணவிகள் மாணவர்கள், ஆசிரியர்கள், பராமரிப்பாளர் ஆகிய நாங்கள் இந்த விதிமுறைகளை மதித்து பின்பற்றுவோம்!** |

[2] § 66 Abs. 2 VSV

1. ஒவ்வொரு சமூகமளிக்காமையும் எழுத்துமூலம் இந்தக்கொப்பியில் பதிவு செய்யப்படுவதுடன் காரணமும் எழுதப்படும்.(மன்னிப்பு). சமூகமளிக்காததிற்கான காரணத்தை அந்த வகுப்பிற்கான ஆசிரியரிடம் அவர்கள் கேட்க முன்பே அறிவிக்க வேண்டும். இது அடுத்து வரும் நாளில் நடைபெற வேண்டும்.

   இந்த மன்னிப்பு அறிவித்தல் தெரிவிக்க ஒரு வாரத்திற்கு மேல் எடுத்தால் இது உங்கள் மதிப்பீட்டுப்பத்திரத்தில் குறிக்கப்படும். இந்நிலை தொடருமாயின் இது பற்றி பாடசாலை நிர்வாகத்திற்கு அறிவிக்கப்படும்.

2. காரணத்தை நீங்களாக எழுத வேண்டும். பெற்றோர் அதன் உண்மைத்தன்மையை தமது கையெழுத்தால் உறுதி செய்ய வேண்டும். குறிப்பிட்ட இடத்தில் சமூகமளிக்காத திகதி, கால அளவு மற்றும் அதற்கான காரணம் குறிப்பிடப்பட வேண்டும். (உதாரணத்தை பார்க்கவும்)

3. சமூகமளிக்காத காலத்தில் தவறவிட்ட பாடங்கள் திரும்பக்கற்க வேண்டும். இதில் சம்பத்தப்பட்ட ஆசிரியரிடம் வேறு ஒழுங்கு ஏற்பாடு செய்யாவிடின், தவற விட்டதை மீட்பதற்கு அதேயளவு நேரம் ஒதுக்க வேண்டும்.

4. எதிர்பாராதவிதமான சமூகமளிக்கமுடியாதநிலை.

   நீங்கள் (அல்லது உங்கள் பெற்றோர்) ஆகப்பிந்தியது 10 மணி இடைவேளைக்கு முன்பாக தொலைபேசி மூலம் அறிவிக்க வேண்டும். 044 454 22 30. தொலைபேசி பாடசாலை தொடங்கிய நேரம் முதல் 7.25 , மற்றும் இடைவேளை நேரத்தில் பயன்பாட்டில் இருக்கும்.

   நீங்கள் வகுப்பிலிருந்து (வாந்தி போன்ற...) வெளியேற நேரிட்டால், இதை தொடர்பு கொப்பியில் அச்சமயத்தில் கற்பித்த ஆசிரியரிடம் கையோப்பமிடச்செய்வதன்மூலம் உங்கள் பெற்றோருக்கு தெரியப்படுத்தலாம்

5. முன்கூட்டியே தெரிந்த சமூகமளிக்காதநிலை

   a. வைத்தியர் அல்லது பல்வைத்தியரிடம் இயன்றவரை பாடசாலை முடியும் நேரம் அல்லது பாடசாலை நேரம் தவிர்ந்த சமயங்களில் நேரத்தை ஒதுக்கவும். பலதடவைகள் காரணம் தெரிந்த சமூகமளிக்காமையை ஒவ்வொரு தவணையும் கற்கும் நேரத்தை மீட்க வேண்டும். இதற்கான அறிவிப்பை ஆகப்பிந்தியது குறித்த நாளிற்கு முதல்நாள் ஆசிரியரிடம் தெரிவிக்க வேண்டும்.

   b. 2 நாட்கள் வரை சமூகமளிக்காமை (விடுதலைக்கு முன்போ/ பின்போ இல்லாமல்)
   இப்படியான நிலைமையில் நீங்கள் மற்றும் உமது பெற்றோர் 2 வாரங்களுக்கு முன்பு வகுப்பாசிரியரிடம் விண்ணப்பிக்க வேண்டும்.(விதிவிலக்கு ) இந்த விண்ணப்பத்துடன் பழகிப்பார்க்கும் கற்கைநெறி அல்லது அதுபோன்ற உறுதிப்பத்திரத்தை பெற்றோர் வைக்க வேண்டும்.

   c. 2 நாட்களுக்கு மேற்பட்ட சமூகமளிக்காதநிலை (உ.ம்: பழகிப்பார்க்கும் கற்கைநெறி) அல்லது விடுமுறைக்கு முன்பு/பின்பு)

   இந்நிலையில் நீர் மற்றும் உமது பெற்றோர் (இதுவும் 2 வாரங்களுக்கு முன்பு) எழுத்து மூலம் பாடசாலை நிர்வாகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

பழகிப்பார்க்கும் கற்கைநெறியாயின் 2 வாரங்களுக்குள்தான் பெரும்பாலும் உமக்கு அதற்கான சம்மதம் கிடைக்கலாம். இப்படியான நிலைமைகளில் இந்த அனுமதி உறுதிமொழியை விரைவில் நிவாகத்திற்கு தெரிவிக்கவும். அனுமதிக்கப்பட்டவிடுமுறை அனுமதியை (முன்கூட்டி தெரிந்த சமூகமளிக்காதநிலை) சம்பந்தப்பட்ட சகல ஆசிரியர்களுக்கும் தெரிவிக்க வேண்டும்.

6. கல்விகற்றல் - பாடங்களிலிருந்து தள்ளி வைத்தல்:

இந்த மன்னிப்பையும் இந்தக்கொப்பியிலேயே எழுதவேண்டும். 2 வாரத்திற்கு மேற்பட்ட காலமாயின் ஓர் வைத்திய அறிக்கை கொண்டு வர வேண்டும். ஆசிரியருடன் வேறு ஏற்பாடுகள் செய்யாவிடின் நீங்கள் வகுப்பில் எப்போதும் சமூகமளிக்கவேண்டும்.

Jokertage/ **ஜோக்கர் நாட்கள்**

## சூரிச் மாநில 28.06.2006 திகதி ஏற்படுத்திய பாடசாலை நடைமுறை (VSV)

§ 30 [1] **மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் 2 நாட்கள் காரணங்கள் கொடுக்காமல் சமூகமளிக்காது இருக்கலாம்**. (Jokertage)
[3] **பெற்றோர் இந்த ஜோக்கர் நாட்களிற்கு முன்கூட்டியே விண்ணப்பிக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் எடுக்கப்படும் ஜோக்கர் நாளும் - அது அரை நாளாக இருந்தாலும் - முழு நாளாகவே கருதப்படும். பாவிக்கப்படாத ஜோக்கர் நாட்கள் கழிக்கப்பட்டு விடும்.**

**பாடசாலை அதிபர்களின் கூட்டுத்தீர்மானம்:**

- **பெற்றோர் ஜோக்கர் நாட்களுக்கான விண்ணப்பத்தை தேவைப்படும் நாளுக்கு குறைந்தது 2 நாட்களுக்கு முன் பொறுப்பான ஆசிரியரிடம் கொடுக்க வேண்டும்.**
- **பராமரிக்குமிடத்திற்கு பிள்ளைக்கு பொறுப்பானவர்களே அறிவிக்க வேண்டும். முன்கூட்டியே அறிவிக்காதுவிடின் பெற்றோரின் பங்களிப்புக்கட்டணம் கழிக்கப்படமாட்டது.**
- **மாணவர்கள் (விடுபட்ட பாடங்களை மீட்பதற்கு) தொடர்ந்து கற்க கடமைப்பட்டுள்ளார்கள்.**

**மேலதிக விபரங்கள்: விசேஷமாக Rebhügel பாடசாலையின் நடைமுறை:**

- **வகுப்பாசிரியர் மற்றும் பாடசாலை நிர்வாகம் உங்களுக்கு எந்த நாட்களை ஜோக்கர் நாட்களாக எடுக்க முடியாது என்று கூறுவார்கள். இந்த நாட்கள் முக்கிய, விசேட செயற்பாடுகளை கொண்ட நாட்களாக, உ.ம்: பாடசாலை உலா, வகுப்பு முகாம், திட்டங்கள் மற்றும் விளையாட்டு நாட்கள்.**
- **வெவ்வேறு சமய முக்கிய விடுமுறை நாட்கள் ஜோக்கர் நாட்களாக எடுக்கமுடியாது.(ஜூலை 2005 BID சட்டமூலம் )**
- **கோடை விடுமுறைக்கு 2 வாரங்களுக்கு முந்திய கிழமையில் ஜோக்கர் நாட்கள் எடுப்பதற்கு வகுப்பாசிரியர் மற்றும் ஆசிரியை அனைவரின் சம்மதம் தேவை. பாடசாலை ஆண்டின் இறுதி வாரத்தில் எடுப்பதற்கு பாடசாலை நிர்வாகத்தின் அனுமதியுடன் மட்டுமே சாத்தியமாகும்.**